STC 491/2020

Date: 02.03.2022

P.W.1

குறுக்கு விசாரணை

வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் மஸ்டர்ரோல் படிவம் 5 ல் பராமரிக்கப்படும் தகவல்கள் இருந்தால் குறைந்தபட்ச கூலி சட்டத்தின் கீழ் தனியாக மஸ்டர்ரோல் தனியாக பராமரிக்ப்பட வேண்டியதில்லை. தோட்ட தொழிலாளர் சட்டத்தின் படி பராமரிக்கப்பட்டு வரும் நிரந்தர மஸ்டர்ரோலில் உள்ள விவரங்கள் மற்ற சட்டத்தின் கீழ் தேவைப்படும் விவரங்களை காட்டிலும் கூடுதலாக பராமரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தோட்ட தொழிலாளர் சட்டத்தின் படி மஸ்டர்ரோல் பராமரிக்கப்பட்டால் குறைந்தபட்ச கூலி சட்டத்தின் படி தனியாக பராமரிக்கப்பட தேவையில்லை என்றால் சரியல்ல. குறைந்தபட்ச கூலி சட்டம் பிரிவு 27(5)ன் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் விலக்கு அளிக்கப்பட்டுள்ள பிரிவின் கீழ் எந்த தகவல்கள் பெறப்படவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தமிழ்நாடு அரசாணை எண் 151/2017 செயல்பாட்டுக்கு வரவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. தொழிலாளர் ஆணையர் அலுவலக ந.க. எண் 1/2/21304/2015, நாள் 09.08.2019 தேதியிட்ட குறிப்பாணை படி ஆய்வு மேற்கொண்டு 48 மணி நேரத்திற்குள் ஆய்வு உத்தரவு கொடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த குறைபாடுகளை 15 நாட்களுக்குள் சரி செய்ய எதிரி நிறுவனத்திற்கு வாய்ப்பு அளிக்கக்பட வேண்டும் என்றும் அவ்வாறு கொடுத்த பின்பு வாய்ப்பை பயன்படுத்த தவறும்பட்சத்தில் ஏன் நிவர்த்தி செய்யவில்லை என்று கேட்டு அதன் பிறகு குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி அனைத்து கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் உதவி ஆணையர் தோட்ட நிறுவனங்கள் ஆகியோர் உத்தரவு போட்டு அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டிய நிறுவனங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது மேலும் மேற்கண்டி அதிகாரிகள் துணை ஆய்வர், உதவி ஆய்வர் ஆகியோருக்கும் மேற்கண்ட விவரங்களை தெரிவித்து நடவடிக்கை எடுக்க அந்த குறிப்பாணை வலியுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் பின்பற்றவில்லை என்றால் சரிதான். குறிப்பாணையில் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள முரண்பாடுகள், குறைபாடுகள் அனைத்தும் பார்க்கவேண்டிய தேவையில்லை

ஆனால், படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுக்கும் மட்டும் ஆய்வு செய்வதோடு அதற்கு அப்பாற்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளகூடாது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இக்குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை வெளியிடப்படவில்லை. மேலும், தோட்ட நிறுவனங்களுக்கு இது பொருந்தாது. தோட்ட நிறுவனங்களுக்கு இது பொருந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தோட்ட தொழிலாளர் சட்டங்களை அமலாக்கம் செய்யும் அதிகாரி நான் என்றால் சரிதான். தோட்டத்தொழிலாளர் சட்டங்களை பொறுத்தவரை அமலாக்க அதிகாரி நான்தான். அமலாக்கத்துறை தனியாக இல்லை. குறிப்பாணையில் இதர ஆலுவலர்களை தவிர உதவி ஆணையர் தோட்ட நிறுவனங்களுக்கு தாங்களே தோட்ட நிறுவனங்களை தேர்வு செய்து ஆய்வு மேற்கொள்ளலாம் என்று குறிப்பிபட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த குறிப்பாணை தொழிலாளர் உதவி ஆணையர் என்ற முறையில் என்னை கட்டுப்படுத்தும் என்றால் தற்சமயம் சரியல்ல. வழக்கு அனுமதி கோரி அனுப்பப்பட்ட வழக்கு முன்மொழிவில் மேற்குறிப்பிட்ட குறிப்பாணை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது ஆய்வு சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. வழக்கு அனுமதி ஆணை உண்மையை மறைத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஆய்வு மற்றும் வழக்கை சட்டவிரோதமாக வேலை அளிப்பவர் மீது போட்டதால் நல்லெண்ண அடிப்படையிலான பாதுகாப்பு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வேலை அளிப்பவர் என் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பணியாற்றிய இடத்தில் இதுபோன்று சட்டவிரோத நடவடிக்கை எடுத்ததால் புகாரின் அடிப்படையில் கன்னியாகுமரிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல.